**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.T.C.801/2026**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பிரேம்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கணேசன்** | **Calling** | : | **தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கம், துணை இயக்குநர்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **25** |
| | | | **Dated** | : | **25.06.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

**திரு. பிரேம்குமார், துணை இயக்குநர் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் தற்போது திண்டுக்கல் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகத்தில் துணை இயக்குநராக பணி செய்கிறேன். திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு ரோடு, பித்தளைப்பட்டி, SF.No.110–114 AB என்ற முகவரியில் இயங்கி வரும் சகானா டெக்ஸ்டைல்ஸ் டிவிசன் ஆப் சகானா கிளாத்திங் கம்பெனி என்ற தொழிற்சாலை இயங்கி வருகிறது. மேற்படி தொழிற்சாலையில் கடந்த 24.10.2024 அன்று முற்பகல் 10.00 மணியளவில் திருமதி.அன்னலட்சுமி மற்றும் 16.11.2024ம் தேதியன்று

முற்பகல் 9.00 மணியளவில் திரு.சிவ்சங்கர், 23.02.2025 அன்று பிற்பகல் 07.45 மணியளவில் திரு.ரா.சச்சின்குமார் ஆகிய தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்து பற்றிய தகவலை விபத்து நடந்த 12 மணி நேரத்திற்குள் படிவம் எண். 18ன் மூலமாக தொழிக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை துணை இயக்குநருக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆனால் இவ்வழக்கின் எதிரி தகவலை தெரிவிக்காதது தொழிற்சாலை சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 88(1)(3) விதி 96 (1)(2) – ன் கீழ் கடுமையான முரணாகும்.

மேலும், மேற்படி தொழிற்சாலையில் கடந்த 12.04.2024 பிற்பகல் 2.15 மணியளவில் திரு.தனபாலன், 12.04.2025 அன்று பிற்பகல் 9.25 மணியளவில் திருமதி.இருளம்மாள், 03.11.2025 அன்று செல்வி ஜான்சிராணி பிங்குவா ஆகிய தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்து பற்றிய தகவலை விபத்து நடந்த 48 மணி நேரத்திற்குள் படிவம் எண். 18ன் மூலமாக தொழிக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை துணை இயக்குநருக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆனால் இவ்வழக்கின் எதிரி தகவலை தெரிவிக்காதது தொழிற்சாலை சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 88(1)(3) விதி 96 (4) – ன் கீழ் கடுமையான முரணாகும்.

மேலும், மேற்படி தொழிற்சாலையில் விபத்துக்குள்ளான தொழிலாளிகள் 21 நாட்களுக்குள் பணிக்கு திரும்பாவிட்டால், 28 நாட்களுக்குள் படிவம் எண். 18B–ன்படி தொழிக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை துணை இயக்குநருக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆனால் இவ்வழக்கின் எதிரி தகவலை தெரிவிக்காதது தொழிற்சாலை சட்டம்

1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 88(1)(3) விதி 96 (6) – ன் கீழ் கடுமையான முரணாகும்.

மேலும், மேற்படி தொழிற்சாலையில் திருமதி.அ.அன்னலட்சுமி என்ற தொழிலாளி chain sprocket drive–ல் படிந்திருந்த பஞ்சை இயந்திரம் இயங்கிக் கொண்டிருந்தபோதே சுத்தம் செய்ய அனுமதித்ததால் அவருடைய வலது கையின் ஆள்காட்டி விரல், நடுவிரல் மற்றும் மோதிரவிரல் ஆகிய விரல்களில் காயம் ஏற்பட்டு விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்தானது தொழிற்சாலை சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 21(2) உடன் விதி 53 அட்டவணை I பாரா 3(3)– ன் கீழ் கடுமையான முரணாகும்.

மேலும், மேற்படி தொழிற்சாலையில் திரு.G.சிவ்சங்கர் முண்டா என்ற தொழிலாளி Bale Press இயங்கிக் கொண்டிருந்தபோது Bale Press–ல் உள்ள கதவுக்குள் இடது கையின் முன்னங்கைப் பகுதியை நுழைத்துப் பிடித்துக் கொண்டு Bundle ஆன Bale ஐ காலால் உதைத்துத் தள்ள முயன்றபோது மேலே சென்ற Bale Press–ன் Loading Plotform அவருடைய இடது கையின் புறங்கை மற்றும் மணிக்கட்டு பகுதியை நசுக்கி விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்தானது தொழிற்சாலை சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 41 உடன் விதி 61 F – ன் கீழ் கடுமையான முரணாகும்.

மேலும், மேற்படி தொழிற்சாலையில் திரு.சச்கின்குமார் என்ற தொழிலாளி கார்டிங் இயந்திரம் 8–ன் பின்பகுதியில் உள்ள கதவைத்திறந்து இயந்திரம் ஓடிக் கொண்டிருந்த நிலையில் புளோரூமில் இருந்து வரும் பஞ்சை ஓபன் செய்து தரும் ரோலர் பகுதியில் இருந்த பஞ்சை Air hose உதவியால் சுத்தம் செய்தபோது, Air hose மாட்டிக்

கொண்டதால் அதை வெளியே எடுக்க முயன்றபோது வலது கையின் விரல்கள் மேற்படி சுற்றிக் கொண்டிருந்த ரோலரில் மாட்டி விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் ஆள்காட்டிவிரல், நடுவிரல், மோதிரவிரலில் காயம் ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்தானது தொழிற்சாலை சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 41 உடன் விதி 61 F – ன் கீழ் கடுமையான முரணாகும்.

ஆய்வறிக்கை படிவம் **அ.சா.ஆ. 1,** மேலாளர் மீதான காரணம் கோரும் அறிவிப்பு **அ.சா.ஆ. 2,** அஞ்சலக ஒப்புதல் அட்டை **அ.சா.ஆ. 3,** மேலாளரின் பதில் கடிதம் **அ.சா.ஆ.4,** வாக்குமூலங்கள் **அ.சா.ஆ.5,** E.S.I Form – 12 **அ.சா.ஆ.6**, புகைப்படங்கள் **அ.சா.ஆ.7**, மேல்நடவடிக்கை தொடர்தல் குறித்த கடிதம் **அ.சா.ஆ.8**, வழக்கு அனுமதி ஆணை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எதிரியின் கவனக்குறைவினால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் தொழிற்சாலையில் எவ்வித பாதுகாப்பு குறைபாடும் இல்லை என்றும், விபத்து நடந்த நேரத்தில் தங்களால் உரிய படிவங்களில் விபத்து அறிக்கையினை சமர்பிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் தொழிலகத்தில் தற்போது மேற்கண்ட குறைபாடுகள் இல்லை என்பதால் நாங்கள் தாக்கல் செய்து இருக்கும் வழக்கில் இருந்து எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 25.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.06.25 18:23:51 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.